Deposition of witness

(Chapter XXII Code of Criminal Procedure)

முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரி

| அமர்வு வழக்கு எண். | SC.No. 197 of 2019 | அரசு தரப்பு | அ.சா. 09 |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஜாபர் உசேன் | எதிரி தரப்பு | |
| தகப்பனார் பெயர் | | வயது | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | | |

**Solemnly affirmed in accordance with the provision of Act 1969 of 17th day of February 2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது கல்லாவி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2001-ம் வருடம் பதிவு செய்யப்பட்ட கல்லாவி காவல் நிலைய குற்ற எண். 359/2001 சட்ட பிரிவுகள் 147, 148, 341 IPC & 3 of PPDL Act வழக்கின் புலன் விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணன் பணி ஓய்வு பெற்றுவிட்டதாலும், தொடர் புலன் விசாரணை மேற்கொண்டு குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்த அப்போதைய காவல் ஆய்வாளர் திரு. உதயகுமார் இறந்துவிட்டதாலும், இந்த வழக்கு கோப்பினை ஆவணங்களின் அடிப்படையில் தற்போதைய கல்லாவி காவல் நிலைய ஆய்வாளராகிய நான் வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்களை பரிசீலினை செய்து அதன் அடிப்படையில் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 25.06.2001 தேதி உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது, இரவு 11.30 மணிக்கு SMBS என்ற பஸ்ஸின் நடத்துனர் திரு. சக்திவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் கல்லாவி காவல் நிலைய குற்ற எண். 359/2001 சட்ட பிரிவுகள் 147, 148, 341 IPC & 3 & 4 of PPDL Act படி வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த புகார் மனுவை இறந்து போன கிருஷ்ணன் உயிருடன் இருந்த போது பெற்றுக்கொண்டார், அந்த புகாரானது அ.சா.ஆ.6 ஆக குறியிடப்படுகிறது.

அந்த முதல் தகவல் அறிக்கை என்னிடம் தற்போது காட்டப்படுவது தான், அது அ.சா.ஆ.7 ஆக குறியிடப்படுகிறது. அந்த வழக்கினை மேற்சொன்ன உதவி ஆய்வாளர் கிருஷ்ணன் அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான போச்சம்பள்ளி ரோட்டில் மேட்டு சூலக்கரை கிராமம் துரைசாமி வீட்டின் அருகே அமைந்துள்ள சம்பவ இடத்தினை பார்வையிட்டு, காலை 6.00 மணிக்கு அங்கிருந்த சாட்சிகள் முகமது உஸ்மான் மற்றும் சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்திருக்கிறார், அந்த பார்வை மகசர் ஏற்கனவே குறியிடப்பட்டுள்ளது, என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடம் கிருஷ்ணன் அவர்களால் தயார் செய்யப்பட்டது, அது அ.சா.ஆ.8 ஆக குறியிடப்படுகிறது. சம்பவ இடத்திலிருந்த சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட கற்களை அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 7.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.9 ஆக தற்போது குறியிடப்படுகிறது.

பின்னர் அங்கிருந்த சாட்சிகள் சக்திவேல், துரை, வெங்கடேஷ், பாரதி, மேட்டு தாங்கலான் (எ) துரைசாமி, நாகராஜ், சர்சில், முகமது உஸ்மான், சக்திவேல் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்திருக்கிறார். கைப்பற்றப்பட்ட கற்களுக்குண்டான படிவம் 95 அ.சா.ஆ.10 ஆக குறியிடப்படுகிறது. கைப்பிடி அளவுள்ள 10 கருங்கற்கள் சா.பொ.1 வரிசையாக குறியிடப்படுகிறது. சாட்சிகளின் அடிப்படையில் நடந்த சம்பவம் உண்மை என தெரியவந்ததால், எதிரிகளை தேடி செல்லும் போது கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் காட்டப்பட்டி கூட்டுரோடு அருகே நின்றுக்கொண்டிருந்த எதிரிகள் ராமசாமி, வரதராஜன், கிருஷ்ணன், முருகன், மூர்த்தி, ரமேஷ், பொன்னரசு ஆகியோர்களை 13.30 மணிக்கு இந்த வழக்கின் காரணம் கூறி கைது செய்துள்ளார். பின்னர் கைது செய்த எதிரிகளை நிலையம் கொண்டு வந்து தகுந்த வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். கைப்பற்றப்பட்ட தடயங்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். கடந்த 27.06.2001 தேதி உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணன் அவர்கள் சாட்சிகள் நாகராஜ் மற்றும் மேட்டுதாங்கலான் (எ) துரைசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார்.

பின்னர் தலைமறைவாகியுள்ள எதிரியை தேடும் போது கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் புதூர் பிரிவு ரோடு அருகே நின்றிருந்த எதிரிகள் திருமால் மற்றும் சங்கர் ஆகியோரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். பின்னர் கடந்த 28.06.2001 தேதி காலை 9.00 மணிக்கு

தலைமறைவாகியுள்ள எதிரியை தேடும் போது எதிரி பர்குணன் என்பவரை கும்மலூர் பிரிவு ரோடு அருகே இந்த வழக்கிற்காக கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முகமது உஸ்மான், சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். எதிரி பர்குணனின் ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.11 ஆக குறியிடப்படுகிறது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை கூட்டிக்கொண்டு போனால் தான் சம்பவத்தின் போது அணிந்திருந்த தீப்பிடித்த சட்டையை தனது மாமனார் வீட்டில் மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஆஜர் செய்வதாக கூறியுள்ளார்.

அதன் படி எதிரி பர்குணன் மன்னாடிபட்டி கிராமம் கூட்டி சென்று அவரது மாமனார் சுருட்டையன் வீட்டில் மறைத்து வைத்திருந்த தீப்பிடித்து எரிந்த போன சட்டையை எடுத்து ஆஜர்படுத்தியதை அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 11.15 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் உதவி ஆய்வாளர் கிருஷ்ணன் அவர்கள் கைப்பற்றியுள்ளார். 28.06.2001 தேதியில் 11.15 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் 2வதாக கையொப்பமிட்டுள்ள சக்திவேல் என்பவர் கையொப்பம் மட்டும் செய்துள்ளார். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.12 ஆக குறியிடப்படுகிறது. அன்றைய தினமே இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட TCD 1771 என்ற பதிவெண் கொண்ட SMBS பேருந்தினை மோட்டார் வாகன ஆய்வாளருடைய ஆய்விற்காக உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணன் அவர்கள் வாகனத்தினை அனுப்பி வைத்திருக்கிறார். மோட்டார் வாகன ஆய்வாளருடைய ஆய்வறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியிடப்பட்டுள்ளது. பின்னர் கடந்த 14.07.2001 தேதி தலைமவைாகியுள்ள எதிரிகளை தேடும் போது கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ஓலைப்பட்டி கூட்டு ரோடு அருகே நின்றுக்கொண்டிருந்த எதிரிகள் செந்தில்குமார், குமார் ஆகியோர்களை காலை 5.30 மணிக்கு உதவி ஆய்வாளர் கிருஷ்ணன் அவர்கள் இவ்வழக்கின் நிமித்தமாக கைது செய்துள்ளார்.

மேலும் எதிரி செந்தில்குமார் அவர்கள் தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். ஏற்கனவே முடிவுற்ற வழக்கில் 5வது எதிரியாக முன்னிடப்பட்ட செந்தில்குமார் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.13 ஆக தற்போது குறியிடப்படுகிறது. கடந்த 16.07.2001 தேதி எதிரி ஆறுமுகம் என்பவரை இந்த வழக்கிற்காக காலை 5.00 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் கடந்த 18.07.2001 தேதி எதிரி அழகிரி என்பவரை 13.30 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். மற்ற எதிரிகள் முருகன், கிருஷ்ணமூர்த்தி, செந்தில், மாதேஸ்வரன், சக்திவேல், ரவி, ஜெயசீலன் ஆகியோர் நீதிமன்றத்தில்

சரணடைந்து பிணையம் பெற்றிருக்கின்றனர். கடந்த 17.12.2001 தேதி இந்த வழக்கில் காவல் ஆய்வாளர் திரு. உதயகுமார் அவர்கள் தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு போச்சம்பள்ளியில் உள்ள தீயணைப்பு துறை அலுவலகத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அறிக்கை பெற்றுள்ளார். நிலைய அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், போச்சம்பள்ளி கொடுத்த அறிக்கை அது ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியிடப்பட்டுள்ளது. பின்னர் சாட்சிகள் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. எத்திராஜ், தீயணைப்பு துறை அலுவலர் திரு. கோவிந்தசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். முதல் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் கிருஷ்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து மாதிரி குற்ற அறிக்கை பெற்று கடந்த 03.06.2002 தேதி எதிரிகள் 24 பேர் மீது சட்ட பிரிவுகள் 147, 148, 341 IPC r/w Sec. 3 & 4 of PPDL Act r/w 149 IPC படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். எதிரிகள் A1 முனுசாமி மற்றும் A21 மாதேஸ்வரன் (எ) அண்ணாமலை இருவரை தவிர மீதி எதிரிகள் மீது அமர்வு வழக்கு எண். 76/2016 வழக்கு நடந்து ஊத்தங்கரை சார்பு நீதிமன்றத்தில் 08.03.2016 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் எதிரி A21 மாதேஸ்வரன் (எ) அண்ணாமலை என்பவர் கடந்த 10.10.2019 அன்று இறந்துவிட்டார், அவரின் இறப்பு சான்றிதழ் அ.சா.ஆ.14 ஆக குறியிடப்படுகிறது. காவல் ஆய்வாளர் உதயகுமார் என்பவர் இறந்துவிட்டார், உதவி ஆய்வாளர் கிருஷ்ணன் என்பவர் இருப்பிடம் எங்கிருக்கிறது என்பதை கண்டறிய முடியவில்லை, ஆகவே நான் இன்று அவர்கள் சார்பாக கல்லாவி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் சார்பாக சாட்சியம் அளிக்கிறேன். அ.சா.1 சக்திவேல், அ.சா.6 துரைசாமி இருவரும் சொன்ன வாக்குமூலத்தை தான் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சம்பவ இடத்தை சென்று பார்த்ததாகவும், பார்வை மகசர் தயார் செய்ததாகவும் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. எதிரிகளை கைது செய்ததாகவும், பொருட்களை கைப்பற்றப்பட்டதாகவும் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில்

ஏற்கனவே உடனிருந்த குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றால் சரிதான். எதிரி மீது இந்த வழக்கு ஜோடிக்கப்பட்டு தவறாக தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R

Digitally signed by LATHA V R

Principal Sessions Judge,

Krishnagiri.